**செய்தி வெளியீடு எண்:1209** **நாள்:26.11.2021**

# செய்தி வெளியீடு

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம், சென்னை
## எம்.டி. (சித்தா) பட்ட மேற்படிப்பு 2021 - 2022 கல்வியாண்டு
## அறிவிக்கை

அரசு சித்த மருத்துவக் கல்லூரி, சென்னை மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் 2021 - 2022 - ஆம் கல்வியாண்டிற்கான மூன்றாண்டு எம்.டி. (சித்தா) பட்ட மேற்படிப்பிற்கு சித்த மருத்துவத்திற்கான AIAPGET 2021 (SIDDHA) ல் தேர்ச்சி பெற்றவர்களிடமிருந்து, இணையவழி மூலம் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 03.11.2021 அன்று முதல் வரவேற்கப்பட்டன.

விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை எங்களது அலுவலக வலைதளமான "www.tnhealth.tn.gov.in" னிலிருந்து பதிவிறக்கம் செய்ய மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் பெறுவதற்கான கடைசி நாள் 25.11.2021 - லிருந்து 07.12.2021 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் விவரமான வலைதள அறிவிக்கை, மேற்கண்ட எம்.டி. (சித்தா) பட்ட மேற்படிப்பிற்கான அரசு மருத்துவக் கல்லூரிகளின் விவரம், தகவல் தொகுப்பேடு, பதிவிறக்கம் மற்றும் அவற்றின் கட்டணம், இட ஒதுக்கீடு விதிமுறைகள், படிப்புகளின் விவரம், அடிப்படைத்தகுதி, கல்விக்கட்டணம் மற்றும் இதர விவரங்களுக்கு "www.tnhealth.tn.gov.in" என்ற வலைதளத்தை தொடர்புக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை பதிவிறக்கம் செய்ய கால நீட்டிப்பு செய்யப்பட்ட கடைசி நாள் | 07.12.2021 மாலை 05.00 மணி வரை |
| 2. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் தபால் / கூரியர் சேவை வாயிலாக பெறவோ, நேரில் சமர்ப்பிக்கவோ கால நீட்டிப்பு செய்யப்பட்ட கடைசி நாள் | 07.12.2021 மாலை 05.30 மணி வரை |

இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும்
ஓமியோபதித்துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**